கார்த்திகை மாதம் பூத்திடும் போதில்
கார்த்திகை பூக்களும் பூத்திடும்
கண்ணில் நீத்துளி கோர்க்கும்
நிலமது வேர்க்கும்
நெஞ்சில் நெருப்பினை மூட்டிடும்

கண்ணுக்குள்ளே வைத்து காத்திடும் தீரரை மண்ணுக்குள்ளே விதைத்தோம்
அந்த புண்ணியர் நெஞ்சிலே பூத்ததோர் கனவினை எண்ணத்திலே வளர்த்தோம் 2

கல்லறை வாழ்ந்திடும் வல்லவரே உம்மை கை தொள வந்துள்ளோம் கண்திறப்பீர்
மெல்லிய புன்னகை மேகங்களே உங்கள் சொந்தங்கள் வந்துள்ளோம் வாய் திறப்பீர்

ஆயிரம் ஆயிரம் பேர்களை விதைத்தோம்
கல்லறை வரிசைகள் நீழ்கிறதே அந்த
வரிசையில் சுடர்கள் ஏற்றிடும் பொழுதில்
நெஞ்சினில் நெருப்பது மூழ்கிறதே
வானத்தின் திருணாள் கார்த்திகையே
மாவீரத்தின் பெருணாள் கார்த்திகையே
மானத்தின் திருணாள் கார்த்திகையே எங்கள்
மாதவ நாள் அது கார்த்திகையே
கார்த்திகை மாதம் கறுப்பு இந்த
கார்த்திகை மாதம் நெருப்பு 2

கண்ணுக்குள்ளே வைத்து காத்திடும் தீரரை மண்ணுக்குள்ளே விதைத்தோம்
அந்த புண்ணியர் நெஞ்சிலே பூத்ததோர் கனவினை எண்ணத்திலே வளர்த்தோம் 2

வீசிடும் காற்றதும் சூரிய தீயதும்
உங்களின் கல்லறை பணிகிறதே எங்கள்
தாயகம் முழுவதும் தாங்கிய தோழ்களை
பாத்திட விழிகழும் ஏங்கிறதே
விதைப்பதும் முளைப்பதும் கார்த்திகையே உங்கள்
விழிகளும் மலர்வதும் கார்த்திகையே
நெருப்புகள் எரிப்பதும் கார்த்திகையே எங்கள்
நெஞ்சுகள் சிலிர்ப்பதும் கார்த்திகையே
கார்த்திகை மாதம் கறுப்பு இந்த
கார்த்திகை மாதம் நெருப்பு 2

கண்ணுக்குள்ளே வைத்து காத்திடும் தீரரை மண்ணுக்குள்ளே விதைத்தோம்
அந்த புண்ணியர் நெஞ்சிலே பூத்ததோர் கனவினை எண்ணத்திலே வளர்த்தோம் 2

கல்லறை வாழ்ந்திடும் வல்லவரே உம்மை கை தொள வந்துள்ளோம் கண்திறப்பீர்
மெல்லிய புன்னகை மேகங்களே உங்கள் சொந்தங்கள் வந்துள்ளோம் வாய் திறப்பீர்

கண்ணுக்குள்ளே வைத்து காத்திடும் தீரரை மண்ணுக்குள்ளே விதைத்தோம்
அந்த புண்ணியர் நெஞ்சிலே பூத்ததோர் கனவினை எண்ணத்திலே வளர்த்தோம் 2

இசைத்தட்டு : வல்லமை தரும் மாவீரம்
அகம் கலையகம்